மருந்து கட்டுப்பாடு இயக்குநர்,(பொறுப்பு) தமிழ் நாடு, சென்னை – 600 006
அவர்களின் செயல்முறை ஆணை

[illegible] திரு.ரே.லால்வேனா, இ.ஆ.ப.

ந.க.எண். 14710/நி3/2022 நாள் : 21.08.2024

பொருள்: நிர்வாகம் - மருந்து கட்டுப்பாடு இயக்ககம், சென்னை 6 - கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.பா.வாணி, இளநிலை உதவியாளர் மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், சென்னை 6 பணிவரன் முறை ஆணை வழங்கல் தொடர்பாக.

பார்வை:

1. அ.ஆ.எண்.216, பணியாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள். 15.11.2007
2. அ.ஆ.எண்.560/தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு துறை, நாள் 03.08.1977
3. அரசாணை(நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள்.23/01/2020
4. இவ்வலுவலக பணிநியமன ஆணை ந.க.எண்.14710/நி3/2022, நாள் 25.07.2023
5. அரசு கடித எண்.23243/ஏடி2/2022-1, நாள்.05/09/2022 மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, சென்னை 9

-----

**ஆணை:**

மருந்து கட்டுப்பாடு இயக்ககம், சென்னை.6ன் கீழ் இயங்கி வரும் உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், சேலம் மண்டல (தற்போது நாமக்கல் மண்டலம்) அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.ச.பாலாஜி அவர்கள் 08.07.2020 அன்று பணிக்காலத்திலேயே காலமாகிவிட்டார். இதனை தொடர்ந்து அன்னாரது மனைவி திருமதி.பா.வாணி, கருணை அடிப்படையில் அரசு பணி வேண்டி 04.08.2022 அன்று மேற்கண்ட அலுவலகத்தில் விண்ணப்பம் சமர்ப்பித்திருந்தார். மேலும் தனியர் கருணை அடிப்படையில் அரசு பணி வழங்குவதற்காக உரிய ஆவணங்கள், கல்வி சான்றிதழ்களையும் அசலாக சமர்ப்பித்திருந்தார்.

திருமதி. பா.வாணி, அவர்கள் சமர்ப்பித்துள்ள பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியலுக்கு உதவி இயக்குநர், அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை.6 அவர்கள் மெய்தன்மை சான்றிதழ் வழங்கியுள்ளார். மேலும் வட்டாட்சியர், சேலம் மேற்கு அவர்கள் தனியருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்குவதற்குரிய ஒருங்கிணைந்த சான்றிதழ் வழங்கியுள்ளார். மேலும் பணி நியமனத்திற்கு தேவையான அசல் ஆவணங்கள் முழுவதையும் தனியர் சமர்ப்பித்துள்ளார்.

திருமதி. பா.வாணி, அவர்களின் பிறந்த தேதி 20.09.1988 ஆகும். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால் பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசு பணியின் விதிகளின் (பணி நிபந்தனை)படி, தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுபணியில் இளநிலை உதவியாளராக ரூ.19,500-71,900, நிலை 8 (Level-8) சம்பள விகிதத்தில் பணி நியமனம் செய்யப்பட்டு மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், சென்னை-6ல் **11.08.2023** முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் இணைந்து பணியாற்றி வருகிறார்.

கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி. பா.வாணி என்பவரின் தற்காலிக பணிநியமனம் பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் அரசு கடிதத்தின் அடிப்படையில், தனியர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக பணியில் இணைந்த நாளான **11.08.2023** முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது

பணிவரன் முறை செய்யப்பட்டதையடுத்து தனியர் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். மூன்றாண்டு பணிக்காலத்தில் தொடர் இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் அரசு அலுவலர்களுக்கான பவானிசாகர் பயிற்சியினையும், துறைத்தேர்வான மருந்துவ விதி தொகுப்பு தேர்வினையும் நிறைவு செய்ய வேண்டுமெனவும் தனியர் அறிவுறுத்தப்படுகிறார்.

ஒம் – ரே.லால்வேனா, இ.ஆ.ப.

**மருந்து கட்டுப்பாடு இயக்குநர் (பொ)**

**பெறுநர்**

திருமதி. பா.வாணி, இளநிலை உதவியாளர்

மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், சென்னை 600 006.

**நகல்:** தனியரது பணிப்பதிவேடு

//// ஆணைப்படி அனுப்பப்படுகிறது ////

உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் (நிர்வாக